# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1958/72 - 2016 මාර්තු මස 18 වැනි සිකුරාදා - 2016.03.18

*1958/72 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2016, மாச்சு மாதம் 16 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2016, மாச்சு 16.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் கமத்தொழில் அமைச்சர் (இல. 26) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 5 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம் ;

(ஆ) அதன் நிரல் II இல், 5 இலிருந்து 14 வரையான விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலம் :-

5. தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை
6. பயறு வகை, தானிய ஆராய்ச்சி, உற்பத்தி அதிகாரசபை
7. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
8. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்

9. பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம்
10. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
11. கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி
12. வரையறுக்கப்பட்ட ஜனதா பர்டிலய்ஸர் என்ரபிறய்சஸ்
13. வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி

(2) அவ்வறிவித்தலுக்கு 1945/41 ஆம் இலக்கம் மற்றும் 2015.12.18 ஆந் திகதி செய்யப்பட்ட திருத்தத்திற்கமை உள்ளடக்கப்பட்டுள்ள விசேட பணிப்பொறுப்புகளுக்கான அமைச்சர் (இல. 50) என்ற தலைப்பின் I ஆம் II ஆம் III ஆம் நிரல்களை அடுத்து பின்வரும் புதிய தலைப்புகளை உள்ளடக்குவதன் மூலம் :-

(51) பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. பிரதேச அபிவிருத்தி மற்றும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனத்துடன் தொடர்புபட்ட கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. தேசிய கமத்தொழில் பல்வகைப் படுத்துகையும், குடியேற்ற அதிகார சபையும் (ஹதபிம) | * வேறேதேனும் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டங்களும் |
| 2. பிரதேச கைத்தொழில் ஊக்குவிப்பு உள்ளிட்ட பிரதேச பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக ஏற்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒருங்கிணைப்புச் செய்தல் | | |
| 3. நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 4. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | |
| 5. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

4-395

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.